# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 7. பொதுக் கூட்டங்கள் (உள்ளரங்கம் மற்றும் வெளியரங்கம்)

தற்போதைய சூழ்நிலையில் பொதுக் கூட்டங்களை (உள்ளரங்கம் மற்றும் வெளியரங்கம்) நடத்துவதை தடை செய்ய வேண்டும். எனவே, பங்கேற்பாளர்களை மட்டுப்படுத்தும் பொருட்டு இணையம்/ சமூக ஊடகங்கள் ஊடான இயங்கலை ஒளிபரப்பு (*online streaming*) மற்றும் பொதுசனத் தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்துவதும் விரும்பத்தக்கது. பொதுக் கூட்டத்தை நடத்துவது இன்றியமையாததாகக் கருதப்பட்டால், பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**பிரத்தியேக தகவல்கள்/ வழிகாட்டல்கள்**
**அமைப்பாளர்களுக்கு**

- கூட்டத்தை முடிந்தவரை குறுகிய நேரத்தில் நடாத்தி முடியுங்கள்.
- ஒரு வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் பங்கேற்பாளர்களின் அடர்த்தியைக் கருத்திலெடுங்கள். ஆதலால் நபர்களுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணுவதற்கு அளவான எண்ணிக்கையினரை மட்டுமே மட்டுமே நுழைய அனுமதிக்க வேண்டும்.
- ஒரு மீற்றர் இடைவெளியை தெளிவாகக் குறிக்கும் வகையில் இருக்கை வசதிகளைச் செய்வது விரும்பத்தக்கது.
- பங்கேற்பாளர்கள் அனைவரும் சரியான முறையில் முகக்கவசங்களை அணிந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- கூட்டத்தின் தொடக்கத்தில் முற்தடுப்பு ஏற்பாடுகள் குறித்துத் தெரியப்படுத்தவும்இ கூட்டம் நடக்கும் போதும் குறித்த இடைவெளிகளில் அதனை மீள்நினைவுபடுத்தவும்.
- நுழைவாயிலில் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சவர்க்காரம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் கை கழுவுவதற்கான வசதிகளை அல்லது கை தூய்மிப்பான்களை வழங்குங்கள். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் கூட்ட வளாகத்திற்குள் நுழைவதற்கு முன்பும் கூட்டம் முடிந்து வெளியேறும் போதும் கைகளைச் சுத்தம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும்.
- கூட்டம் உள்ளக அரங்கில் நடத்தப்பட்டால், கூட்டம் நடக்கும் இடத்தை நன்கு காற்றோட்டமாக வைத்திருங்கள்இ மேலும் கதவு கைப்பிடிகளை மக்கள் தொடுவதைத் தவிர்ப்பதற்காக முடிந்தவரை கூட்டம் நடக்கும் இடத்திற்கு செல்லும் அனைத்து கதவுகளையும் திறந்து வைக்கவும்.
- பங்கேற்பாளர்கள் அனைவரும் மற்றவர்களுடன் கை குலுக்கல் உட்பட எந்தவொரு உடல் தொடர்புகளிலிருந்தும் விலகி இருக்க வேண்டும்.
- கூட்டத்தில் உணவு மற்றும் பானங்கள் பரிமாறப்பட்டால் அவ்வாறு பரிமாறுவதற்கு முன்னதாக உணவைக் கையாளும்/பரிமாறும் நபர்கள் சவர்க்காரம் மற்றும் நீர் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தமது கைகளை உரிய முறைப்படி கழுவிக் கொள்வது அத்தியாவசியமாகும். சுயமாக உணவைப் பரிமாறிக் கொள்வதைத் தவிர்க்கவும்.
- சுயமாக உணவைப் பரிமாறும் ஏற்பாடுகள் செய்யப்பட்டால் உணவு பரிமாறும் மேசையைச் சுற்றி மக்கள் கூடாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், மேலும் அவர்கள் தேனீர் வேளைகளில் கூட்டம் கூடாமல்/அரட்டை அடிக்காமல் இருப்பதையும் உறுதிப்படுத்துக.
- பயன்படுத்திய மெல்லிழைத் தாள்கள், கைதுடைக்கும் கடதாசிகள் மற்றும் பாவித்தபின் வீசிவிடும் பொருட்களை இடுவதற்கென மூடிய குப்பைத் தொட்டி ஒன்று வைக்கப்பட வேண்டும்.
- கூட்டத்திற்கு முன்னும் பின்னும் அடிக்கடி தொடுகைக்குள்ளாகும் மேற்பரப்புகளையும் பொருட்களையும் மாசுநீக்கி மற்றும் தண்ணீர் ஆகியவற்றினால் சுத்தம் செய்யுங்கள்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பாளரின் பொறுப்பு ஆகும்.

பொதுக்கூட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு

- உங்களுக்கு சுவாச நோய் அறிகுறிகள் இருந்தால் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம்.
- பொதுக்கூட்டம் முடியும்வரை ஒருவருக்கு ஒருவர் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணவும்.
- முகக்கவசம் சரியாக அணியப்பட வேண்டும்.
- பொதுக்கூட்ட வளாகத்தினுள் நுழையும்போதும் வெளியேறும்போதும் கைகழுவுவதற்கான வசதிகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் உங்கள் கரங்களை சவர்க்காரமும் நீரும் கொண்டு அல்லது கைதூய்மிப்பான் மூலம் தொற்றுநீக்கிக் கொள்ளுங்கள்.
- பிற பங்கேற்பாளர்களுடன் சகலவிதமான உடல் தொடுகைகளையும் தவிர்க்கவும்.
- அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் மேற்பரப்புகளை அனாவசியமாகத் தொட வேண்டாம். உதாரணம். கதவுக் கைப்பிடி, கைபிடிச் சட்டங்கள் (*Railings*).

அறிவுறுத்தும் முறைகள்

- அறிவுறுத்தல்களை கூட்ட ஆரம்பத்தின் போதும் கூட்டம் நடக்கும் போது குறித்த இடைவெளிகளிலும் தெரிவிக்கவும்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020